
# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்




**பொழிவு 13** **ஜீலை 2020** **ஆகாரம் 07**



# ஆயர் மடல்

**REV. S.P BASKAR**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருபெயரில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!

**என்னோடு கூடக் கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.**

**GLORIFY THE LORD WITH ME; LET US EXALT HIS NAME TOGETHER...** சங்கீதம்/Psalms 34:3

சிஎஸ்ஐ தமிழ் திருச்சபை-அலைன்; இறை குடும்பத்தினராகிய உங்களுடன் இணைந்து ஆண்டவரின் திருப்பணியை செய்ய எங்களை குடும்பமாய் அழைத்த ஆண்டவருக்கு துதியும்! கனமும்! மகிமையும்! உண்டாவதாக! அத்துடன் என்னை தெரிவு செய்த சினாட் செயலகம் குறிப்பாக மதிப்பிற்குரிய பிரதம பேராயருக்கும், என்னை உற்சாகப்படுத்தி என்னை பரிந்துரை செய்த மெட்ராஸ் மறைமாவட்ட பேராயர் பேரருட்திரு. டாக்டர். ஜெ. ஜார்ஜ் ஸ்டிபன்; அவர்களுக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் சர்வதேச அளவில் பரவி வரும் இக்காலகட்டத்தில்; நமது திருச்சபைகள் மூடப்பட்ட நிலையிலும் நாம் கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் இணையதளம் மூலமாக பல்வேறு நிலையில் திருபணியாற்றிட ஆண்டவர் கொடுத்திருக்கிற இந்த நல்ல வாய்ப்புகளுக்காக உங்களுடன் இணைந்து துதிக்கின்றேன். இந்த காலங்களில் நான்/நாங்கள் உங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும் இணையதளம் மூலமாக உங்களை சந்திக்க ஆண்டவர் வாய்ப்பினை கொடுத்தார். ஆராதனை நடத்தவும், ஆண்டவரின் செய்தியை பகிரவும், ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி, காரியக் கமிட்டி கூடுகைகள் ஆகியவற்றை இணையாதள வழியாக நடத்தவும், சந்திக்கவும் வாய்ப்பினைப் பெற்றதற்காக ஆண்டவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகள் நமது திருச்சபையில் சிறப்பான திருப்பணியை நிறைவேற்றிய மரியாதைக்குரிய அருட்திரு.எம்.கிறிஸ்டோபர் ராஜேந்திரன் அய்யா அவர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து அவருக்காகவும், குடும்பத்திற்காகவும், திருப்பணிக்காக ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம். கொரோனா'19 இந்த காலங்களில் நமது திருச்சபையின் திருப்பணியை மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகின்ற நமது திருச்சபையின் துணை தலைவர் திரு.ஏ.ஸ்.கண்ணன் ஐயா, செயலாளர் திரு. சுரேஷ் ராஜன், பொருளாளர் திரு. மெல்பின் பால், மற்றும் கமிட்டி அங்கதினர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், நன்றியும், தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆண்டவரை ஆராதிக்க ஜெபிப்போம். உங்கள் மத்தியில் திருப் பணியாற்ற நாங்கள் நல்ல பயணத்தை மேற்கொள்ள தொடர்ந்து ஜெபிக்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
இறைப்பணியில் உங்கள் ஆயர்

# திருமறை தியானம்

## திருமறை தியானப்பகுதி - சங்கீதம் 25

Show Me your ways, O Lord, teach me your paths. - Psalms. 25:4

**கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்
உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். சங்கீதம் 25:4**

**அன்புக்குரிய இறைமக்களே!**

**சங்கீதம் 25, தாவீதின் சங்கீதம் ஆகும். இது ஒரு நம்பிக்கை மிக்க மன்றாட்டு சங்கீதம் ஆகும். இந்த சங்கீதத்தின் ஆசிரியர் ஆண்டவர் தம்மைப் பாதுகாக்கவும், தம்மை நல்வழி நடத்திச் செல்லவும், தமக்கு மன்னிப்பு அருளவும், அமைதியும் மீட்பும் தரவும், ஆழ்ந்த நம்பிக்கையோடு விசுவாசத்தோடு ஆண்டவரிடம் வேண்டுகிறார் என்பதை புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.**

The Psalmist prays for God's covenant Mercies when suffering affliction for Sins and when enemies seize the coccassion to attack, perhaps by trying to discredit the king through false accusations. Appealing to God's Covenant benevolence and to his own reliance on the Lord. he Prays for deliverance from his enemies for guidance in Gods will, for the forgiveneness of his sins and for relief from his afflication.

In this it is releted to God's forgiveness will express itself in removing his afflication, and his enemics will no longer have accassion to slander him. And with God guiding him in "his way" he will no longer wander in to rebellinus ways.

**சங்கீதம் : 25**

**வசனம் 1 : கர்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்துகிறேன். இது ஆண்டவரே "நீரே எனக்கு எல்லாம்", என்று கூறும். அடியாரின் ஆழ்ந்த நம்பிக்கை விசுவாசத்தை குறிக்கின்ற குரலாக புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.**

**வசனம் 2, 3 : நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்.... இதில் என் ஜெபத்தை கேட்கவில்லை என்றால், என் பகைவர்கள் என்னை நகைப்பார்கள் எனவே நான் வெட்கப்பட்டு போகாதபடி செய்யும் என்று ஜெபிக்கின்ற ஜெபம் ஆகும்.**

**வசனம் 4 : கர்தாவே உம்முடைய வழிகளை எனக்கு தெரிவுயும். உம்முடைய பாதைகளை எனக்கு போதித்தருளும். இது ஆண்டவர் மனுக்குலத்திற்கு ஆருளுகின்ற ஒழுக்கநெறிகள் ஆகும். இதை தான் தாவிது சொல்லுகிறார். நான் உம்முடைய வழிகளில் நடக்க உம்முடைய பாதைகளை எனக்கு போதியும் என்று ஜெபிக்கின்றார்.**

- ❖ துன்பத்திலும் அவநம்பிக்கை (விசுவாசமில்லாத) இடம் கொடுக்கக்கூடாது.

- ❖ அவரது உடன்படிக்கையில் நிலைத்து இருக்கவேண்டும்.

- ❖ பாவமன்னிப்பு பெற்றுள்ளோம் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவரது வழியில் நடக்கவும் பின்பற்றவும் அழைக்கப்படுகின்றோம்.

**வசனம் 6 :** கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங்களையும் நினைத்தருளும்....

இங்கு இரக்கத்தைக் குறிக்கும் எபிரேய வார்த்தை “ரெஹெம்” பயன்படுத்தப்படுகிறது. இது ஆண்டவரின் பேரிரக்கத்தையும், பேரன்பையும் காண்பிக்கப்படுகின்றது. எனவே தமது வழியில் இரக்கங்களினால் நம்மை நடத்துகின்றவர் என்பதை புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

எனவே இந்த COVID-19 (Corona Virus Pandemic) காலக்கட்டத்தில் நம்முடைய கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் ஆண்டவருடன் இணைந்து வாழவும், அவரில் நம்பிக்கைக்கொள்ளவும், அவர் காண்பிக்கின்ற பாதையில் நம்மை அர்பணிக்கவும் நாம் அழைக்கப்படுகின்றோம். அப்படிப்பட்ட நல்வாழ்வை ஆண்டவர் நமக்கு கொடுப்பாராக.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

இறைப்பணியில்
உங்கள் ஆயர்
**Rev. S.P. பாஸ்கர்**



ஏவாள்

# ஏவாள் (ஆதியாகமம் 3:20)

ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். ஆதியாகமம் . 3:20
Adam named his wife Eve, because she would become the mother of all the living. Genesis. 3:20

ஏவாள் (ஏவா) இவர் வீராங்கனையாகவும், சுயமரியாதை உள்ளவராகவும் முடிவெடுப்பதில் தன்னுரிமை பெற்றவராகவும் காண்பிக்கப்படுகின்றார். தான் வாழும் சமூகம், உறவினர்கள், இயற்கை இவற்றை மதித்தார், இவருக்குள் இருந்த குணாதிசயங்களை சிந்திப்போம்.

❖ **ஏவாள் தன் கணவனை அதிகமாக நேசித்தவர். (ஆதி. 3:6)**

பெண்கள் தாங்கள் முதலில் சாப்பிட வேண்டும் என்று நினைப்பது கிடையாது. மாறாக தன் கணவன், பிள்ளைகள் இவர்களுக்கு பறிமாறிய பிறகு தான் சாப்பிடுவார்கள். அது போல தான் ஏவாள் தனக்கு கிடைத்த பழத்தை தன் கணவனுக்கும் கொடுக்கவேண்டும். அவரும் தெளிவுபெறவேண்டும் என்ற ஆர்வத்தில் கொடுத்தார். இது தன் கணவனை நேசித்தார் என்பதைக் காண்பிக்கின்றது.

❖ **ஏவாள் துணிச்சலான பெண். (ஆதி. 3:2)**

ஏவாள் தனக்கு முன்பாக நிற்கும் சாத்தானின் பிரதிநிதியாகிய பாம்பிடம் உரையாடல் செய்யும் துணிச்சலான பெண்ணாக செயல்படுகின்றார். பாம்பு கொடுக்கும் பழத்தை சாப்பிட்டால் என்ன நடக்கும் என வினா எழுப்படுகிறார்.

❖ **ஏவாள் ஒரு பலசாலியான பெண் :**

ஏவாளுக்கு வலியைத் தாங்கிக்கொள்ளக் கூடிய பலத்தை ஆண்டவர் வழங்கி இருக்கவேண்டும். பிரசவ வேதனையை அனுபவித்து பிள்ளை பெறுவாய் என்று கடவுள் சொன்னதிலிருந்து இன்றுவரை பிரசவவலியைத் தாங்கும் சக்தி உடைய பலசாலியான பெண்ணாகவே உள்ளனர்.

❖ **ஏவாள் ஒரு தனித்துவம் வாய்ந்த பெண் (ஆதி. 3:13)**

ஆண்டவருக்கும் ஏவாளுக்கும் இடையே நடந்த உரையாடல்களில் ஏவாள் நேர்மையாக பதில் சொல்வதைப் பார்க்கலாம். ஏவாள் என்பதின் பொருள் உயிருள்ளோர் அனைவருக்கும் அவளே தாய் என்பதாகும். இந்த சிறப்பு தான் அவருடைய தனித்துவம் ஆகும்.

ஆயரம்மா மடல்

❖ ஏவாள் என்பவர் கடவுளின் சாயல் (ஆதி. 1:27)

கடவுள் தம் உருவில் மனுகுலத்தைப் படைத்தார். கடவுளின் சாயலிலேயே படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். “ஆதாம்” என்னும் எபிரேயர் சொல்லிற்கு “மண்” என்பது பொருள் எனவும், ஆதாம் என்பதற்கு மன்னால் ஆனவன் என்பது பொருள், ஆனால் ஏவாள் மண்ணில் இருந்து உருவாகவில்லை, அவள் ஆதாமின் எலும்பிலிருந்து வருவானதாகவே வாசிக்கின்றோம்.

எபிரேய மொழில் “ஈஷ்” என்பது ஆண் என்றும், “ஈஷா” என்பது பெண் என்பது எபிரேயர் சொல்லாகும். கடவுள் தம் சாயலில் ஆணையும், பெண்ணையும் படைத்தார் என்பதில் அடிப்படைப் பொருள், கடவுளின் சாயல் என்பது அனைத்திற்கும் பொதுமானவை ஆகும். எனவே ஈஷ், ஈஷா ஆகிய இருவரும் கடவுளைப் போலவே சாயலில் உருவாகியிருந்தனர்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இறைபணியில்
திருமதி. E. நான்சி ஏஞ்சலோ பாஸ்கர்.
ஆயரம்மா



# செயலரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே...

நல் மேய்ப்பராய் உடனிருந்து அற்புதமாய் அதிசயமாய் வழிநடத்தி பாதுகாத்து வருகின்ற திரியேக தேவனுக்கு மகிமையை கனத்தையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறேன்.

கடந்த 24 மாதங்கள் கர்த்தருடைய உன்னத ஊழியத்தை திருச்சபையின் சபைகுழுவோடு இணைந்து செய்வதற்கு கர்த்தர் பாராட்டின மேலான கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த வாய்ப்பினை கொடுத்த சபை மக்களாகிய உங்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திருச்சபையின் வருடாந்திர பொதுகுழுக் கூட்டமானது ஒவ்வொரு நிதிஆண்டின் இறுதியில் ஏப்ரல் மாதத்தில் அல்லது ஜூன் மாதம் 30'ம் தேதிக்கு முன் அதை நடத்த வேண்டும் என்பது நமது சபையின் ஒழுங்கு. ஆனால் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், ஆலயங்கள் திறக்கப்படவில்லை என்பதையும், முன்னின்று நடத்துவதற்கு நம்முடைய திருச்சபையின் போதகர் இவ்விடத்திலே இல்லாததைக் கருத்தில் கொண்டும்; வருடாந்திர பொதுகுழுக் கூட்டத்தை குறித்த காலத்தில் நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதை சபை மக்களாகிய உங்களுக்கு அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம். திருசபையின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் வருடாந்திர பொதுகுழுக் கூட்டத்தை நடத்த சபைக்குழுவால் முயற்ச்சிகள் மேற்க்கொள்ளப்படும்.

சபையின் அனைத்து ஆராதனைகளையும் ஆன்லைன் மூலமாக சரியான நேரத்தில் ஒளிபரப்ப உதவி புரிகின்ற அருள்திரு.எஸ்.பி.பாஸ்கர் போதகர் ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதுள்ள கால சூழ்நிலைகள் யாவும் மாறுவதற்கும், குறித்த நேரத்தில் விசா கிடைக்கபெற்று, அலையேன் பட்டணத்திற்கு கடந்து வந்து இறை பணியை நம்முடைய திருச்சபையில் சிறக்க செய்யவும் நீங்கள் யாவரும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறேன். இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூட்டங்கள் மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு உதவி புரிந்த திரு.எம்.சி.கிறிஸ்டோபர், திருமதி. ஷாலி மெல்பின், திரு.சந்தோஷ் குமார், திருமதி. அகஸ்டா லாரன்ஸ் அவர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்

ஆலயக் கதவுகள் திறக்கப்படவும், நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விடுதலைபெறவும் நாம் யாவரும் கண்ணீரோடும் ஊக்கத்தோடு திறப்பிலே நிற்போம். தவறாமல் ஆன்லைன் மூலமாக ஒளிபரப்பப்படும் ஆராதனைகளில் பங்கு பெறுங்கள் கர்த்தரோடு தொடர்ந்து நிலைத்திருங்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு; நிருபத்தில் குறிப்பிடுவது போல எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்போம். நமது தனிப்பட்ட வாழ்க்கை கர்த்தருக்கு மகிமை கொண்டு வருவதாக அமையட்டும். தொடர்ந்து ஜெபிப்பதிலும் வேதம் வாசிப்பதிலும் முன்னேறிச் செல்வோம் கர்த்தர் நம்மை தொடர்ந்து வழி நடத்துவாராக.

இப்படிக்கு...அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
எஸ். சுரேஷ் ராஜன்..





# கட்டுரைகள்

## குணசாலி தேசத்தின் ஆசீர்வாதம்

சுறுசுறுப்பான மனைவி கண்ணும் கருத்துமாய் தன் வீட்டு காரியத்தைக் கவனிப்பவள் (நீதி 31:27) புருஷனை நேர்த்தியாய் தேசத்து மூப்பர்களோடே நியாய ஸ்தலத்தில் பேர் பெற்றவர்களாக காணலாம். புருஷனும் பிள்ளைகளும் உன்னைப்போல நாங்கள் யாரையும் கண்டதில்லை என்று புகழ்பட்ட அவள் வீட்டாரின் எதிர்கால ஆபத்துக்களை அறிந்து செயல்படுகிறவள். புருஷனுடைய சம்பத்தின் பெருக்கத்திற்க்கு அவளே காரணம். சிறுமையானவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவள் ஒருபெலன்.

வீட்டுக் காரியங்களை நீ கனித்துக் கொள். நான் வெளியின் காரியங்களை பார்த்துக் கொள்கிறேன் என்ற புரிந்து கொள்ளுதலோடு செயல்படும் இந்தத் தம்பதியினருக்குப் பிறந்த பிள்ளைகள் தாய் தகப்பனை புகழக் கற்றிருந்தனர். காயம் பட்டர்கள் அவளைத் தேடி வருவர். அலங்காரம் செய்து கொள்தில் அவளுக்கு அதிகம் கவனம் இல்லை. ஏனெனில் சௌந்தர்யம் வஞ்சனை உள்ளது என்றும் அழகு வீண் என்றும் அவள் அறிவாள். ஒரு பெண்ணே மற்றொரு பெண்ணை பாராட்டுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. ஆனால் (நீதி 31:31) ல் வித்தியாசமாக பார்கிறோம்.

குணசாலியான அவளுடைய செய்கைகள் குடும்பத்தைக் கட்டுவிப்பதற்க்கும், காத்து கொள்கிறதற்க்கும் கஷ்டப்படுவோர்க்கும் நியாயம் இழைத்தோர்க்கும் களைப்பை மாற்றுபவர்களான இந்த தம்பதியர் வாழ்வுக்கு முக்கிய மூல காரணம். கர்த்தருக்கு பயந்து அவர் வழியில் நடக்கிறவன் எவனோ....அவன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சை செடி அவன் பிள்ளைகளோ ஒலிவமரக் கன்றுகள் என்று கூறப்படுகிறது.

கர்த்தருக்கு பயப்படும் தம்பதியர் தங்கள் குடும்பத்திற்க்கும், தாங்கள் வாழும் பட்டணத்திற்க்கும் தங்கள் தேசத்திற்க்கு செளிப்பையும் மற்றும் சமாதானத்தையும் கொண்டு வருபவர்கள் அல்லவா? (சங் 128: 5,6) அப்படிப்பட்டர்களாக நம்மை தேவன் நிறுத்தட்டும். தேவன் கொடுத்த குணசாலியைக் கொண்டு குடும்பத்தையும், தேசத்தையும் திருச்சபையையும் கட்ட முயல்வோம்!

நெல்சன் சோபித ராஜ்




வேதத்தில் தேவனை நோக்கி ஜெபித்த மக்களின் விண்ப்பங்களை தேவன் கேட்டு அவர்கள் விண்ணப்பங்களுக்கு பதிலளித்தார், இன்றும் அவ்வண்ணமே செய்து வருகிறார். ஜெபத்தின் வழியே நாம் உலகத்தை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதனை சில வேத வசனங்கள் வழியாய் புரிந்து கொள்ள முயல்வோம்.

1. ஆதியாகமம் 32:28 – அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப் படாமல் இஸ்ரவேல் எனப்படும். தேவனோடும் மனிதரோடும் போராடி மேற் கொண்டாயே என்றார்.

   ***‘ஜெபிக்கிறவன் தெய்வீக மனுஷனாக மாறுவான், உலகத்தை மேற்கொள்வான்.’***

2. ஆதியாகமம் 32:30 – அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முக முகமாய் கண்டேன், உயிர் தப்பி பிழைத்தேன், என்று சொல்லி அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பெயரிட்டான்.

   ***‘ஜெபிக்கிறவன் தேவனை தரிசிப்பான்.’***

3. ஆதியாகமம் 33:16 – அன்றயத்தினம் ஏசா திரும்பித் தான் வந்த வழியே சேயீருக்குப் போனான்.

   ***‘ஜெபிக்கிறவனின் சத்துரு பின்னிட்டு ஓடுவான்.’***

4. அப்போஸ்தலர் 21:4-5 – அவ்விடத்திலுள்ள (சீப்புரு தீவிலுள்ள) சீஷரைக் கண்டு பிடித்து, அங்கே ஏழு நாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி; நீர் எருசலேமுக்குப்போக வேண்டாம் என்று ஆவியின்

ஏவுதலினாலே சொன்னார்கள். அந்த நாட்கள் நிறைவேறின பின்பு, நாங்கள் புறப்பட்டுப் போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழி விட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையில் நாங்கள் முழங்காற் படியிட்டு ஜெபம் பண்ணினோம். வசனம் 17 – நாங்கள் எருசலேமுக்கு வந்த போது சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

***'யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்கள் சிந்தனையில் மாற்றம் உண்டாகும்'***

5. அப்போஸ்தலர் 12:8-11– தூதன் அவனை (பேதுருவை) நோக்கி; உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளை தொடுத்துக்கொள் என்றான். அவன் அப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி; உன் வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னே வா என்றான். அந்தபப்டியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப் பட்டது மெய்யென்று அறியாமல் தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாங்காவலையும் இரண்டங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. ஆதின் வழியாய் அவர்கள் பறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள். உடனே தூதன் அவனை விட்டுப் போய் விட்டான்.


பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது; ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும் படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழது மெய்யாய் அறந்திருக்கிறேன் என்றான்.

***'ஜெபிக்கிறவர்களுக்கு தேவ தூதன் ஊழியம் செய்வான்'***

அருமையானவர்களே! வேதத்திலே இன்னும் அனேக விதமான அதிசயங்களை, ஜெபத்தின் மூலம் அவருடைய பிள்ளைகள் பெற்றுக்கொண்ட மேனமைகளை நாம் காணலாம். நாமும் அவ்வண்ணமான மென்மைகளை காண வேண்டாமா ? ஜேபிப்போம், ஜெபத்தை நம் வாழ்வின் வெற்றியின் ஆயுதமாக கொள்ளுவாம். தேவன் தாமே நம் ஒவ்வொருவர்க்கும் அப்பேர்பட்ட அனுபவத்தை தருவாராக.

*M. Nesamony.*






**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களுக்கு...**

**இயேசு கிறித்துவின் இனிதான நாமத்தில் தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மயினால் எழுதப்பட்ட எழுத்தின் மூலமாய் உங்களை சந்திக்க செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த நெருக்கத்தின் காலத்திலும் கர்த்தர் நம்மை அவருடைய கரத்தின் நிழலினால் மறைத்து வைத்து பாதுகாக்கிறார். எவ்வளவு ஒரு பேரன்பு கொண்ட கர்த்தர் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்த நாளில் கூட கர்த்தர் நம்மோடு பேச நினைக்குற வசனம்; 1 இராஜாக்கள் 19:13 (முதலில் எனக்கு கொடு...)**





எனக்கு அன்பான சகோதர்களே, முதலில் நாம் கர்த்தருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று ஆண்டவர் நமக்கு உணத்துகிறார். எலியா என்கிற தீர்க்கதரிசியை கர்த்தர் சாரிபாத் வீட்டுக்கு போக சொல்லுகிறார். எலியா அங்கு சென்ற போது; அந்த விதவை தாயிடம் கொஞ்சம் தண்ணீர், கொஞ்சம் அப்பம் கொண்டுவா என்கிறார். ஒரு ஏழை விதவை தாயிடம் என்ன இருக்குக்கப்போகிறது... கஷ்டப்பட்ட சூழ்நிலை, மரிக்க போகிற நிலைமை, அப்போது அந்த தாயார் சொல்லுகிறார்; ஐயா என்னிடம் கொஞ்சம் எண்ணெய், ஒரு பிடி மாவு மாத்திரம் தான் உள்ளது என்று சொல்லுகிறார்...அந்த தாயாரின் நிலைமை எலியாவை அனுப்பின கர்த்தருக்கு தெரியும், ஏன் கர்த்தர் நினைத்திருந்தால் எலியாவை ஒரு வசதியான வீட்டுக்கு போக சொல்லி இருக்கலாம்; அங்கு தான் நாம் சிந்திக்கவேண்டும் மரிக்க போகிற சூழ்நிலை; தானும் தன் மகனும் இந்த அப்பத்தை சாப்பிட்டு செத்து போகப்போகிறோம்; என்று எலியாவிடம் சொல்லுகிறார்... பின்பு என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

எலியா (முதலில் எனக்கு கொடு) என்று சொன்னதும் தன்னை நாடி வந்த கர்த்தருடைய தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அப்படியே கொடுக்கிறாள். வேதம் சொல்லுகிறது அந்த தேசத்தில் மழை கட்டளையிடும் நாள் வரையிலும் பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, களத்தில் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை என்று வேதம் சொல்லுகிறது.

கர்த்தருக்கு அன்பான சகோதரர்களே முதலில் நாம் கர்த்தருக்கு முதலில் இடம் கொடுப்போம் அது நேரமானலும் சரி அல்லது கர்த்தர் நமக்கு கொடுத்த பிள்ளைகளானாலும் சரி; அல்லது நாம் சம்பாதிக்கும் சம்பாத்தியங்களானாலும் சரி, கர்த்தருக்கு தான் முதலில் கொடுக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது; **மத்தேயு:6:33 (முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்)** என்று முதலில் நாம் கர்த்தரை தேடாமல், கர்த்தருடைய சமூகத்தில் முழங்கால் படியிட்டு ஜெபிக்காமல், எதை தேடினாலும், அல்லது எதை நாடினாலும் நமக்கு தோல்விதான்.

எனவே இந்த கொரோனா கொள்ளை நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் முதலில் கர்த்தருக்கு நேரத்தை கொடுப்போம்; பிறகு கர்த்தர் நம் குடும்பத்தை பாதுகாத்துக்கொள்ளுவார். எனவே கிறித்துவுக்குள் அன்பான சகோதரர்களே முதலில் ஜெபிப்போம்; பிறகு ஜெயம்பெறுவோம். அப்படியாக கர்த்தர்தாமே நம்மை ஒவ்வொருவரையும் பாதுகாத்து ஆசிர்வதிப்பாராக. ஆமென்

கிறிஸ்துவின் பணியில்
சா. அசோக்குமார்.







ஆண்கள் சங்கம் சிறப்புகூடுகை ஆன்லையின் முலமாக நடத்த தேவன் கிருபைக்கூர்ந்தார். அனல்மூட்டும் சாட்சிகளை தேவன் எழுப்பினார். தேவனுடைய வார்த்தையை பகிர்ந்தளித்த ஒவ்வொருவருக்கும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக என்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு கிறிஸ்துவின் பணிகள் உங்கள் சகோதரன்

# Women's Fellowship

## The Cross

A young woman was sitting on a sofa and reading her Bible. Seeing no way out, she dropped to her knees in prayer. "Lord, I can't go on," she said, "I have too heavy of a cross to bear." The Lord replied, "My daughter, if you can't bear its weight, just place your cross inside this room. Then, open that other door and pick out any cross you wish."

The woman was filled with relief and said, "Thank you, Lord," and she did as she was told. Upon entering the other door, she saw many crosses, some so large the tops were not visible. Then, she spotted a tiny cross leaning against a far wall. "I'd like that one, Lord," she whispered.

And the Lord replied, "My daughter, that is the cross you just brought in." When life's problems seem overwhelming, it helps to look around and see what other people are coping with. You may consider yourself far more fortunate than you imagined.

There isn't a person in the world that hasn't faced obstacles. God has planned a path for you. Each path is unique and will have many ups and downs. Each step serves a purpose. Be patient with our family, friends, and strangers that do not understand. Keep an eternal perspective. And, our greatest hope is that of an eternal heaven with our Lord Jesus Christ. Become the person that God wants you to be.

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."– Jeremiah 29:11

*Mrs. Shally Melbin*

# Youth Fellowship

## வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?

## உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே

வழிமாற பல வழிகள்!
வஞ்சனையாக பல எண்ணங்கள்,
வாசலண்டை வந்து நிற்கும்,
வல்லவரை
வரவழைக்க மனமுண்டோ !
மனதில்...


வாலிபனே !
வாலிபனே !

வஞ்சனையுள் வீழ்வாயோ !
வகைதேடி சுற்றித்திரியும்,
சிங்கத்தின் வாயில் !
விழித்தெழுந்தோர் சிலர் !
விலகியோடியவர் சிலர் !
விண்ணுலகை,
விண்ணவரை அடைந்தோர் சிலர் !
பலவான் கையில் உள்ள அம்பாய்
ஆர்த்தெழுவோம் !
அர்ப்பணிப்போம் !
ஆராதிப்போம் !
ஆண்டவரை... அகமகிழ்வோம் !

எண்ணமும் எழுத்தும் திரு. ஜோயல் சந்தோஷ் குமார்

**If you think GOD is Boring; You have NEVER Encountered the GOD of the BIBLE**

# "Do not say, I am just a youth...!"




**When God called Jeremiah**, he replied, **"Ah, Lord God! Behold, I cannot speak, for I am a youth"** (Jer 1:6). **But God corrected him, "Do not say, I am a youth."**

He gave seven reasons why Jeremiah should not hesitate to accept His commission. We have thousands of young men and women today who are excusing themselves under one pretext or the other. Maybe you are one of them. Read through the entire first Chapter of Jeremiah and see if you can still excuse yourself!

**"Some statistics for Christian youths, god choose the 50% people, in the first time, they involved in missionary field work in the age of 18 to 25 all around the world".**

**1. Do not say, I am just a youth —for I have CHOSEN you!**
"Before I formed you in the womb I knew you; before you were born I sanctified you; and I ordained you a prophet to the nations" (v 5)

**2. Do not say, I am just a youth— for I am SENDING you!**

"You shall go to all to whom I send you" (v 7)

**3. Do not say, I am just a youth— for I am ACCOMPANYING you!** "Do not be afraid of their faces, for I am with you to deliver you" (v 8)

**4. Do not say, I am just a youth—for I am TEACHING you!** "Then the Lord put forth His hand and touched my mouth, and the Lord said to me: Behold, I have put My words in your mouth" (v 9)

**5. Do not say, I am just a youth— for I am AUTHORIZING you!** "See I have this day set you over the nations and over the kingdoms, to root out and to pull down, to destroy and to throw down, to build and to plant" (v 10)

**6. Do not say, I am just a youth— for I am GUIDING you!** "The word of the Lord came to me, saying, 'Jeremiah, what do you see?' And I said, 'I see a branch of an almond tree.' Then the Lord said to me, 'You have seen well, for I am ready to perform My word' " (v 11-16)

**7. Do not say, I am just a youth— for I am STRENGTHENING you!** "Behold, I have made you this day a fortified city and an iron pillar, and bronze walls against the whole land... They will fight against you, but they shall not prevail against you. For I am with you to deliver you" (v 17-19)

*Article by: Mr. Joel Santhosh Kumar*




# திருப்பாதம் நம்பி வந்தேன்

சகோதரி சாராள் நவரோஜி


**திருப்பாதம் நம்பி வந்தேன்**
**கிருபை நிறை இயேசுவே**
**தமதன்பை கண்டடைந்தேன்**
**தேவ சமூகத்திலே"**

இந்தப் பாடலுக்கு கிறிஸ்தவ சபைகளில் ஒரு சிறப்பான இடம் உண்டு. இந்தப் பாடலை அதன் அர்த்தத்தை உணர்ந்து பாடும் எவரும் உருகிடுவர். வாலிபர்களுக்கு இந்த பாடலை சபைகளில் (குறிப்பாக தாய்மார்களாகிய பெண்கள்) தூங்கிவழிந்து இராகம் பிழைக்க, இழுத்து இழுத்து பாடுவதை கேட்கும் போது இந்த பாடல் எப்போது முடியும் என்று நினைப்பு வரலாம். ஆனால் இந்த பாடலை எழுதியவர் மிகுந்த கண்ணீரின் அனுபவத்தின் போது இதை எழுதினார். இதன் ஆசிரியர் சகோதரி சாராள் நவரோஜி ஆவார். அக்காலத்தில் பெண்களின் ஊழியங்களில் செயல்படுவது அரிது. இவ்சமயத்தில் அவர் ஜெபிக்கும்படி நாற்பது நாள் எல்லாரையும் விட்டு விலகி வீட்டில் தனித்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் இதை தவறாகப் புரிந்து கொண்ட சபை ஊழியர்கள் ஒரு தவறான கதையை கட்டி விட்டனர். அதென்னவெனில் அந்த சகோதரி தவறான முறையில் கருத்தரித்ததால்தான் வீட்டில் தனியாக யாரும் பார்க்க முடியாதவாறு இருக்கிறார்கள் என்ற கதையை பரப்பினர். இதனால் சகோதரிக்கு பெரிய நிந்தை உண்டாயிற்று. அவமானத்தை எண்ணி மனம் வெதும்பி ஆண்டவரின் சமூகத்தில் கதறி அழுதார். அச்சமயத்தில்தான்

**"என்னைக் கைவிடாதிரும் நாதா; என்ன நிந்தை நேரிடினும்... உமக்காக யாவும் சகிப்பேன் உமது பெலன் ஈந்திடுமே"** - திருப்பாதம் நம்பிவந்தேன்; என்று தன் உள்ளத்தில் உள்ள பாரங்கள் யாவையும் ஆண்டவர் சமூகத்தில் ஊற்றி ஜெபித்து இந்த பாடலை எழுதினார். அவ்வேளையில் நம் ஆண்டவரால் அவர் தேற்றப்பட்டார். இவரது வாழ்க்கை,மற்றும் பாடல்களை குறித்த ஒரு புத்தகம் "முட்களுக்குள் லீலி புஷ்பம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பாடல் இன்றும் பலருக்கு நெருக்கடியான வேளைகளில் தேற்றுவதாய், உள்ளத்தை ஊற்றி ஜெபிக்க உதவுகிறது. நீங்களும் இப்பிண்ணணியத்தை அறிந்தவர்களாய் இப்பாடலின் கவிகளை நோக்கிப் பாருங்கள், பாடுங்கள். பரமனை நோக்குங்கள்.


# CHILDREN'S CORNER

## Beginner




TEACHER: MRS. JEYANTHA BELFER JOHN

**GOOD THINGS IN STORE** A Joyful 'toon by Mike Waters




How abundant are the good things that you have stored up for those who fear you, that you bestow in the sight of all, on those who take refuge in you. – PSALM 31:19 NIV









# COLOURING PAGE

"[Jesus said,] 'Love each other as I have loved you.'" John 15:12



KinderKids

# JESUS LOVES ME

*Write your name here...*



# FILL-IN-THE-VERSE

## FAMOUS VERSES OF JESUS



Add words from the box to finish each Bible verse. All verses are from the New International Version.

| |
|---|
| beginning |
| do |
| earth |
| lamp |
| life |
| loved |
| path |
| plans |
| power |
| Son |
| Spirit |

1) "In the ________________, God created the heavens and the ______________." (Genesis 1:1, NIV)

2) "Your Word is a ______________ for my feet, a light on my _______________." (Psalm 119:105)

3) "Commit to the Lord whatever you _________, and he will establish your ______________." (Proverbs 16:3)

4) "For God so ______________ the world that he gave his one and only _______________, that whoever believes in him shall not perish but have eternal ____________." (John 3:16)

5) "For the ____________ God gave us does not make us timid, but gives us ___________, love and self-discipline." (2 Timothy 1:7)

BEGINNER & PRIMARY

# BOOKS OF THE BIBLE WORD SEARCH

## OLD TESTAMENT 1







**BEGINNER & PRIMARY**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | D | S | D | C | H | R | O | N | I | C | L | E | S | A |
| O | L | O | V | D | E | U | T | E | R | O | N | O | M | Y |
| N | G | E | N | E | S | I | S | S | Z | R | J | J | W | N |
| G | J | P | N | Z | N | B | E | Z | P | C | X | U | R | E |
| O | G | R | H | R | U | F | X | F | S | S | J | D | M | H |
| F | U | O | H | A | M | A | O | N | A | A | S | G | O | E |
| S | H | V | F | O | B | J | D | L | L | M | S | E | N | M |
| O | B | E | Z | U | E | M | U | E | M | U | S | S | Y | I |
| L | R | R | V | E | R | B | S | V | S | E | D | T | P | A |
| O | O | B | G | P | S | V | Y | I | D | L | K | T | U | H |
| M | Z | S | P | S | O | Q | R | T | E | Z | B | C | Q | V |
| O | E | S | T | H | E | R | U | I | V | J | F | J | H | A |
| N | J | O | S | H | U | A | T | C | P | J | O | O | C | Q |
| J | K | I | N | G | S | R | H | U | X | Y | D | B | F | Z |
| E | C | C | L | E | S | I | A | S | T | E | S | T | A | J |







Genesis
Exodus
Leviticus
Numbers
Deuteronomy
Joshua
Judges

Ruth
Samuel
Kings
Chronicles
Ezra
Nehemiah
Esther

Job
Psalms
Proverbs
Ecclesiastes
Song of Solomon







# Color Hunt Challenge

## JESUS TEACHES HOW TO PRAY

### Luke 11:1-8




**Across**

**3.** Prayer is a powerful ______ against the enemy.

**5.** Sometimes Jesus would leave the crowds and his disciples to spend time ______ with God.

**6.** Jesus taught that you must be ________ in prayer and to never give up.

**8.** "Your ______ come. Your will be done, here on earth as it is in Heaven."

**9.** The beginning of the prayer started, "Our ______ in Heaven, holy is your name . . ."

**Down**

**1.** Through prayer, God will ______ for your needs, forgive your sins, and protect you from enemies.

**2.** Who else, besides Jesus, had the disciples heard teaching about prayer?

**4.** There is no sin that God cannot ______.

**7.** "Give us this day our daily ______."

PRIMARY & JUNIOR

# THE BOOK OF JAMES

JUNIOR & SENOIR

## 1) Write your own interpretations to these pictures to the verses in the Book of James









## 2) DEFINE THESE TERMS FROM THE BOOK OF JAMES WITH REFERENCE.

A) Perfect B) Arrogance C) Religion D) to care of
E) Blaspheme F) Endurance

## 3) ANSWER THE QUESTIONS

1) How can one be "guilty of all " by stumbling in one point?
2) How is the word implanted?
3) What is the comparison between our words and a forest fire ?
4) What crime had the rich committed in James 5 :4 ?
5) Explain James 4:17, what is the good in this passage ?

4. Draw a flower with 5 petals and write about HEAVENLY WISDOM in each petal



5 ) Write down the Bible verse from the Book of James which says how the tongue needs to be tamed like each example below:







6 ) Write what word would fit in this picture according to James 4:6



7 ) Find the verse from the Book of James that suits the picture with reference:







# வேத வினா-விடை போட்டி
# (சகரியா 9–14, மல்கியா)

1. "கர்த்தருக்கு பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும் "எதிலே?
2. வேசிப்பிள்ளைகள் எங்கே வாசம் பண்ணுவார்கள்?
3. கர்த்தருடைய நாமத்திற்கு பயந்தவர்கள் எப்படி இருப்பார்கள்?
4. குறி சொல்கிறவர்கள் எதை தரிசித்தார்கள்?
5. நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றது யார்?
6. யார் கபடஸ்தனம் , சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் உரைக்கிறார்?
7. யார் கர்த்தருடைய தூதன்?
8. பூமியில் மீதியாயிருக்கும் மூன்று பங்கு மனிதர்களுக்கு கர்த்தர் செய்வது என்ன?
9. யாருடைய வலது கண் முற்றிலும் இருள் அடையும்?
10. ஞாபக புஸ்தகம் யாருக்காக யாருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது?

**June'2020**

**விடை எழுதியவர்கள்**

திரு.ஜெயபிரதீப் கிறிஸ்டோபர்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷாலினி கிங்சிலி
திருமதி. பெட்ரிஷீயா ஜேசன்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மகதலேன்
திருமதி. சிந்துஜா சதீஷ்
திருமதி. அல்சிட்டா கிங்சிலி
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்







**சென்ற மாத விடைகள்**

| | |
|---|---|
| 1. சகரியா 4: 14 | 2. சகரியா 7:12 |
| 3. ஆகாய் 2:23 | 4. சகரியா 5:2 |
| 5. சகரியா 1:12 | 6. ஆகாய் 1:1 |
| 7. சகரியா 8:17 | 8. சகரியா 3: 4,5 |
| 9. சகரியா 8:2 | 10. சகரியா 1:7 |

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக அனுப்பி வைக்கவும்

# BIRTHDAYS
## Look Who's Celebrating!
# JULY

| | |
|---|---|
| 1-JUL | MR. A.RAVICHANDRAN |
| 4-JUL | MSTR. A. ERIC AARON |
| 5-JUL | MR.P.DAVID RAJ |
| 5-JUL | MRS. JESSY BEULA JOHN JOSEPH |
| 5-JUL | MR. JOSHUVA KOSHY |
| 5-JUL | BABY. ISABELLA JANE |
| 7-JUL | MRS. HEPSI BAI NESAMONY |
| 9-JUL | MRS. GOLDA JENCY STANLY |
| 10-JUL | MSTR. ERIC JAYDEN |
| 11-JUL | BABY. ELIANNA KACY |
| 11-JUL | MSTR. AISHLIN BABU |
| 13-JUL | MRS. PAMELA RACHEL DANIEL |
| 13-JUL | MR. BHASKAR RAJARAM |
| 14-JUL | MR. JASON SAMUEL |
| 15-JUL | MR. SANKARAN CHINNIYAN |
| 19-JUL | MRS. SANGEETHA UJIN RAJ |
| 23-JUL | MR. RAVINDRA |
| 25-JUL | MRS. ANGELIN NALINI |
| 26-JUL | MRS. ROSELIN TAMIL SELVI |
| 28-JUL | MRS. BEETA CHRISTOPHER |
| 28-JUL | MR. DAVID SORNABALAN |
| 29-JUL | MR. DENNIS ROGER |
| 29-JUL | MR. MERVIN SAMUEL |
| 29-JUL | BABY. JANIA PRENI |
| 31-JUL | MR. KINGSLY STOOBERT |
| 31-JUL | MRS. BIJI KUMARI.G.S |
| 31-JUL | MRS. SUJATHA MOHANAKUMAR |

# JULY




**3** MR. ASHOK KUMAR &
MRS. PHILOMINA

**4** MR. A.S KANNAN &
MRS. LAVANYA

**5** MR. SAMAN RAJKUMAR &
MRS. CECILIYA

**8** MR. GEORGE ROSE &
MRS. ANITHA

**12** MR. DAVID LIVINGSTON &
MRS. BEULA RANI

**25** MR. SANKARAN CHINNIYAN &
MRS. KALYANI






## Kids who did the Coloring

Crasslin Devona / Reagan Shan / Hartlyn Herchil
Jania Preni / Johan Sanjo / Chris Gabriel
Eion Jayden / Jeremiah / Jemima

## Kids who did the Spot Difference

Eric Aaron / Reagan Shan / Johan Sanjo
Jason Eric / Ridhun Yojit / Eric Jayden
Jeremiah / Jemima



## Kids who did the Colour Hunt Challenge

Roshan / Eric Aaron / Johan Sanjo
Jason Eric / Eric Jayden
Jonathan / Jeremiah / Jemima

## Kids who did the Fill in the Verse


Roshan / Eric Aaron / Johan Sanjo
Jason Eric / Jonathan / Jeremiah

## Children who successfully did the Bible Quiz

Roshan / Shelbino / Eric Aaron / Jason Eric
Dennis / Annlin / Angelin
Joshika / Joshua / Jonathan

# சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 113 | Mobile No: 050 842 9659 |
|---|---|
| Mr. Ashok Kumar (Head)<br>Mrs. Philomina Ashok Kumar (Wife)<br>Baby. A. Jessica Joylin (Daughter)<br>Baby. A. Jemimah Jacklin (Daughter)<br>Address in India:<br>97D, P. U. Shunmugam Street,<br>Winterpet, Arakkonam, Ranipet-Dt<br>Tamilnadu |  |

| SI Tamil Parish Family No: 114 | Mobile No: 050 141 2529 |
|---|---|
| Mr. Mohana Kumar (Head)<br>Mrs. Sujatha (Wife)<br>Mr. Biddu Mohan (Son)<br>Mr. Biju Mohan (Son)<br>Address in India:<br>7/234A Kuruthalivilai, Amsi<br>Theangapattanam, KK Dist<br>Tamil Nadu |  |

| CSI Tamil Parish Family No: 115 | Mobile No: 050 619 0250 |
|---|---|
| Dr. Pradeev Raj (Head)<br>Mrs. Ramya Mergaratee (Wife)<br>Baby. Efren Joan (Daughter)<br>Address in India:<br>18/3 Anna Nager<br>Irugur, Coimbatore<br>Tamil Nadu |  |

| CSI Tamil Parish Family No: 116 | Mobile No: 056 489 3587 |
|---|---|
| Mr. Stanly Gnanamani (Head)<br>Mrs. Gold Jency (Wife)<br>Baby. Joanna Stanly (Daughter)<br>Mstr. Jeroan Stanly (Son)<br>Address in India:<br>3/10 - Naduvillai Street,<br>Jacobpuram (PO), Tirunelveli Dt<br>Tamilnadu |  |

## ஜூலை 2020 மாதத்திற்கான அருளுரை தலைப்பும், வேதபாடமும்

| நாள் | அருளுறை தலைப்பு | வேதபாடம் |
|---|---|---|
| **03.07.2020**<br>வெள்ளி | கண்காணித்துவம் : வாழ்வாதாரத்தின் மேல் பொறுப்புள்ள மேலாண்மை<br><br>Stewardship Responsible Resource Management | **யாத். 18:13-27**<br>Exodus. 18:13-27<br>**சங். 147:1-11**<br>Psalms. 147:1-11<br>II **கொரி. 8:1-15**<br>II Cori. 8:1-15<br>**மத்தேயு. 25:14-30**<br>Mathew. 25:14-30 |
| **10.07.2020**<br>வெள்ளி | அருட்பணி. அனைவருக்கும் நற்செய்தி<br><br>Mission : Good news to All | **ஏசாயா. 55:1-6**<br>Isaiah. 55:1-6<br>**சங். 146**<br>Psalms. 146<br>**அப். 10:34-43**<br>Act. 10:34-43<br>**மத்தேயு. 4:17-25**<br>Mathew. 4:17-25 |
| **17.07.2020**<br>வெள்ளி | கடவுளின் மனிதர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகள்<br><br>People of God - Ambassadors of Christ | **யோசுவா. 1:1-9**<br>Joshua. 1:1-9<br>**சங். 18:1-30**<br>Psalms. 18: 1-30<br>II **கொரி. 5:16, 6:10**<br>II Cor. 5:16, 6:10<br>**மாற்கு. 6:7-13**<br>Mark. 6:7-13 |
| **24.07.2020**<br>வெள்ளி | அருட்பொழிவுத் திருப்பணி<br>மாற்றுருவாக்கத்திற்கான மாற்றுருவாக்கம்<br><br>Ordained Ministry : Transformed to Trasnform | **எசே. 33 1-9**<br>Ezekiel. 33:1-9<br>**சங். 99**<br>Psalms. 99<br>I **தீமோ. 3:1-13**<br>I Timothy.3:1-13<br>**யோவான். 21:15-19**<br>John. 21:15-19 |
| **31.07.2020**<br>வெள்ளி | இறையியல் கல்வி : இறை மக்களை இறைப்பணிக்கு ஆயத்தப்படுத்தப்படுகிறது.<br><br>Theological Education : Equipping the People of God | **உபா. 6: 1-17**<br>Deut. 6:1-17<br>**சங். 119:89-104**<br>Psalms. 119:89-104<br>**எபே. 4:7-16**<br>Ephe 4:7-16<br>**மத்தேயு. 7:24-29**<br>Mathew. 7:24-29 |

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - ஜூலை 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யோசுவா 3 | சங்கீதம் 126-128 | ஏசாயா 63 | மத்தேயு 11 |
| 2 | யோசுவா 4 | சங்கீதம் 129-131 | ஏசாயா 64 | மத்தேயு 12 |
| 3 | யோசுவா 5,6:1-5 | சங்கீதம் 132-134 | ஏசாயா 65 | மத்தேயு 13 |
| 4 | யோசுவா 6:6-27 | சங்கீதம் 135,136 | ஏசாயா 66 | மத்தேயு 14 |
| 5 | யோசுவா 7 | சங்கீதம் 137,138 | எரேமியா 1 | மத்தேயு 15 |
| 6 | யோசுவா 8 | சங்கீதம் 139 | எரேமியா 2 | மத்தேயு 16 |
| 7 | யோசுவா 9 | சங்கீதம் 140,141 | எரேமியா 3 | மத்தேயு 17 |
| 8 | யோசுவா 10 | சங்கீதம் 142,143 | எரேமியா 4 | மத்தேயு 18 |
| 9 | யோசுவா 11 | சங்கீதம் 144 | எரேமியா 5 | மத்தேயு 19 |
| 10 | யோசுவா 12,13 | சங்கீதம் 145 | எரேமியா 6 | மத்தேயு 20 |
| 11 | யோசுவா 14,15 | சங்கீதம் 146,147 | எரேமியா 7 | மத்தேயு 21 |
| 12 | யோசுவா 16,17 | சங்கீதம் 148 | எரேமியா 8 | மத்தேயு 22 |
| 13 | யோசுவா 18,19 | சங்கீதம் 149,150 | எரேமியா 9 | மத்தேயு 23 |
| 14 | யோசுவா 20,21 | அப்போ. 1 | எரேமியா 10 | மத்தேயு 24 |
| 15 | யோசுவா 22 | அப்போ. 2 | எரேமியா 11 | மத்தேயு 25 |
| 16 | யோசுவா 23 | அப்போ. 3 | எரேமியா 12 | மத்தேயு 26 |
| 17 | யோசுவா 24 | அப்போ. 4 | எரேமியா 13 | மத்தேயு 27 |
| 18 | நியா. 1 | அப்போ. 5 | எரேமியா 14 | மத்தேயு 28 |
| 19 | நியா. 2 | அப்போ. 6 | எரேமியா 15 | மாற்கு 1 |
| 20 | நியா. 3 | அப்போ. 7 | எரேமியா 16 | மாற்கு 2 |
| 21 | நியா. 4 | அப்போ. 8 | எரேமியா 17 | மாற்கு 3 |
| 22 | நியா. 5 | அப்போ. 9 | எரேமியா 18 | மாற்கு 4 |
| 23 | நியா. 6 | அப்போ. 10 | எரேமியா 19 | மாற்கு 5 |
| 24 | நியா. 7 | அப்போ. 11 | எரேமியா 20 | மாற்கு 6 |
| 25 | நியா. 8 | அப்போ. 12 | எரேமியா 21 | மாற்கு 7 |
| 26 | நியா. 9 | அப்போ. 13 | எரேமியா 22 | மாற்கு 8 |
| 27 | நியா. 10,11:1-11 | அப்போ. 14 | எரேமியா 23 | மாற்கு 9 |
| 28 | நியா. 11:12-40 | அப்போ. 15 | எரேமியா 24 | மாற்கு 10 |
| 29 | நியா. 12 | அப்போ. 16 | எரேமியா 25 | மாற்கு 11 |
| 30 | நியா. 13 | அப்போ. 17 | எரேமியா 26 | மாற்கு 12 |
| 31 | நியா. 14 | அப்போ. 18 | எரேமியா 27 | மாற்கு 13 |

# CHILDREN'S BIBLE SCHOOL - ONLINE




# WOMEN'S FELLOWSHIP - ONLINE




பெண்கள் சங்கம் சிறப்புகூடுகை ஆன்லையின் முலமாக நடத்த தேவன் கிருபைக்கூர்ந்தார். அனல்மூட்டும் சாட்சிகளை தேவன் எழுப்பினார். தேவனுடைய வார்த்தையை பகிர்ந்தளித்த போதகர் ஐயா அவர்களுக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக என்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரி

**திருமதி. ஷாலி மெல்பின்**

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி






Strictly For Private Circulation
Editor: Rev. S.P.. Baskar
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparishalain.org